05.01.16

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உழவர் சந்தையில் ரூ.1.50 கோடிக்கு காய்கறி விற்பனை**

தாராபுரம் உழவர் சந்தையில் கடந்த டிசம்பர் மாதம் ரூ. 1.50 கோடி மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து சந்தை நிர்வாகம் சார்பில் திங்கள்கிழமை வெளியிடப்பட்ட செய்தி:

இந்தச் சந்தைக்கு தாராபுரம், குண்டடம், மூலனூர் ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்குக் கொண்டு வருகின்றனர். கடந்த டிசம்பர் மாதம் 4 ஆயிரத்து 30 விவசாயிகள், 14 ஆயிரத்து 915 கிலோ காய்கறிகளை விற்பனைக்குக் கொண்டுவந்தனர். காய்கறிகளை 73 ஆயிரத்து 510 நுகர்வோர்கள் வாங்கிப் பயன்பெற்றனர். இதன் மதிப்பு ரூ. 1.50 கோடி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒரே பிரசவத்தில் இரண்டு கன்றுகளை ஈன்ற பசு**

ராணிப்பேட்டை அருகே ஒரே பிரசவத்தில் இரண்டு கன்றுகளை ஈன்ற பசுவையும், அதன் குட்டிகளையும், பொதுமக்கள் பார்த்துச் சென்றனர்.

ராணிப்பேட்டையை அடுத்த சத்திரம் புதூர் சிலோன் காலனியைச் சேர்ந்த சேட்டு(60) விவசாயி, இவரது மனைவி ராணி(56). இவர்கள் பசு மாடு ஒன்றை கடந்த 5 வருடங்களாக வளர்த்து வருகின்றனர். அந்த பசு கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆண் கன்று ஒன்றையும், ஒரு பெண் கன்றையும் ஈன்றது. ஒரே பிரசவத்தில் இரண்டு கன்றுகளை ஈன்ற பசுவையும், அதன் குட்டிகளையும் கிராம மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

**வேளாண் உற்பத்தியை அதிகரிக்க ஆலோசனை**

போளூரில் 12-வது ஐந்தாண்டு திட்டத்துக்கு வேளாண்மை உற்பத்தி மற்றும் உள்கட்டமைப்பை அதிகரிக்க வேளாண் துறை சார்பில் வட்டார அளவிலான ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் சார்பில், 12ஆவது ஐந்தாண்டு திட்டத்துக்கு வேளாண்மை உற்பத்தி மற்றும் உள்கட்டமைப்பினை அதிகரிக்க ஊராட்சிமன்றத் தலைவர்கள், உழவர் நண்பர்கள் என வட்டார அளவிலான விவசாயிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் போளூரில் திங்கள்கிழமை நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட தொழில்நுட்ப வல்லுநர் மற்றும் ஆலோசகர் ஜெயச்சந்திரன் பேசும்போது, வேளாண் உற்பத்தியை அதிகரிக்க கிராம அளவிலான தேவைகள் மற்றும் ஆலோசனைகள் குறித்தும், விவசாயிகள் நவின விவசாயத்திற்குத் தேவை என்னென்ன என்பது பற்றியும், முன்னேற்றப் பாதையில் விவசாயத்தை கொண்டு செல்லத் தேவை எது என்பது பற்றியும் விவசாயிகள் ஆலோசனை தெரிவித்தால், அரசுக்குத் தெரிவித்து குறுகிய கால சாகுபடியில் நிறைவான லாபம் கிடைக்க வழிவகை செய்யப்படும் எனத் தெரிவித்தார். திருவண்ணாமலை வேளாண் கல்லூரி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் திருக்குமரன், ஒருங்கிணைப்பாளர் வேளாண் உதவி இயக்குநர் வடமலை, தோட்டக் கலைத் துறை, பொறியியல் துறை, பட்டு வளர்ச்சி, வேளாண்மை வணிகம், கால்நடைத் துறை, வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**நெல், நிலக்கடலையில் பயிர் மேலாண்மை பயிற்சி**

நெல், நிலக்கடலை, எள் ஆகியவற்றில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு திங்கள்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது. தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி, பாலக்கோடு, காரிமங்கலம் வட்டாரங்கள் சார்பில் அட்மா திட்டத்தில் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு

வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) இரா.இளங்கோவன் தலைமை வகித்தார்.

வேளாண் இணை இயக்குநர் (பொ) வெங்கடேசன், இயற்கை விவசாயம் குறித்தும் வேளாண்மை துணை இயக்குநர் பாஸ்கர், அட்மா திட்டச் செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

வேளாண் அறிவியல் நிலைய பேராசியர் சண்முகம், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் குறித்து பயிற்சி அளித்தார். பேராசிரியை சங்கீதா, நிலக்கடலை, எள் பயிர்களில் விதைத் தேர்வு, நிலம் தயாரிப்பு, நீர் நிர்வாகம், உர மேலாண்மை, இப்பயிர்களில் மானாவரி சாகுபடி குறித்த தொழில்நுட்பங்கள் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர்கள் அருண்குமார், சிவசங்கரி, இளவரசி ஆகியோர் ஊட்டச்சத்து குறைபாடுகள் மண்புழு உரம், விதைக்கருவி மூலம் நிலக்கடலை விதைப்பு முறை பற்றிய செயல் விளக்கம் அளித்தனர்.

பயிற்சியில் வட்டார நுட்ப மேலாளர்களான, ராஜ்துரை, கார்த்திகேயன், கோபிநாத், ரேணுகா, சேட்டு, பெரியசாமி மற்றும் 120 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25,000 வழங்க வேண்டும்**

திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25,000 வழங்க வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

திருவாரூரில் அண்மையில் நடைபெற்ற அச் சங்கத்தின் கூட்டத்தில் இதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதர தீர்மானங்கள்: அண்மையில் பெய்த பலத்த மழையால் சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டு உற்பத்தி மகசூலை இழந்துள்ளது. பாதித்த

பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கக் கோரி விவசாயிகள் சங்கம் சார்பில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதையடுத்து, மாவட்ட நிர்வாகம் பயிர் பாதிப்பு விவரங்களைக் கணக்கெடுத்து அரசுக்கு அனுப்பியுள்ளதாகக் கூறியது. ஆனால், சாீயான கணக்கெடுப்பு செய்யவில்லை. தமிழக அரசும் நிவாரணம் சம்பந்தமான விவரத்தை இதுவரை அறிவிக்கவில்லை. இந்நிலையில், தற்போது சம்பா நெல் அறுவடை தொடங்கிவிட்டது. பல இடங்களில் அறுவடை செய்ய முடியாத நிலையில் பயிர்கள் முழுவதும் அழிந்துவிட்டன. பிற இடங்களில் ஒரு ஏக்கருக்கு 40 நெல் மூட்டைகள் கிடைக்க வேண்டிய நிலையில், 12 மூட்டை முதல் 15 மூட்டைகள் கிடைத்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். எனவே, மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 25,000 வழங்க வேண்டும். பொங்கல் திருநாளுக்கு முன்னதாக நிவாரணத் தொகையை அறிவித்து வழங்க வேண்டும்.

2012-13 ஆம் ஆண்டு விவசாயிகள் பெற்ற பயிர்க் கடனை தமிழக அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி, பொங்கல் விழாவுக்கு முன்னதாக திருவாரூர் மாவட்டம் முழுவதும் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 40 கிலோ மூட்டைக்கு ரூ. 15 முதல் 25 வரை விவசாயிகளிடம் வசூலிக்கப்படுகிறது. இதைத் தடுக்க வேண்டும்.

நெல் விற்பனைக்குரிய தொகையை விவசாயிகள் விரும்பும் முறையில் பணமாகவோ, வங்கிக் கணக்கு மூலமாகவோ வழங்க வேண்டும். தேவைக்கேற்ப கொள்முதல் நிலையங்களைத் திறந்து வியாபாரிகள் குறுக்கீடு இல்லாது தரமான கொள்முதலை செய்ய வேண்டும்.

நெல் அறுவடை இயந்திரங்களை இயக்கும் முகவர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் என இரு தரப்பினரையும் மாவட்ட ஆட்சியர் அழைத்துப் பேசி கருத்தறிந்து நியாயமான வாடகையை நிர்ணயித்து அறிவிக்க வேண்டும். மீறும் முகவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டத் தலைவர் ரெங்கராஜன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சிபிஐ மாவட்டச் செயலர் செல்வராஜ், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் மாசிலாமணி, மாவட்ட துணைச் செயலர்கள் ஜோசப், செளந்தர்ராஜன், துணைத் தலைவர்கள் சுவாமிநாதன், யோகநாதன், பொருளாளர் பாண்டியன், மாநிலக் குழு உறுப்பினர்கள் உலகநாதன், ராவணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பேச்சிப்பாறை அணையிலிருந்து கூடுதல் நீர் திறப்பு**

குமரி மாவட்டத்தில் பாசனத்துக்காக பேச்சிப்பாறை அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயில் கடுமையாக உள்ள நிலையில் ஆறுகளில் நீர் வரத்து குறைந்து வருகிறது. பாசனப் பகுதிகளில் தண்ணீர் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், பொதுப்பணித் துறையினர் அணைகளில் நீர்மேலாண்மையைக் கடைப்பிடித்து வருகின்றனர். இதன்படி, தற்போது பேச்சிப்பாறை அணையிலிருந்து அதிக தண்ணீர் திறந்துவிடப்படுவதுடன், இதர அணைகளிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது.

திங்கள்கிழமை நிலவரப்படி, பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 44.88 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 314 கன அடி தண்ணீர் வந்து

கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 758 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது.

பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 75.22 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 98 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 51 கன அடி தண்ணீர் பாசனத்துக்காக திறந்து விடப்பட்டிருந்தது.

சிற்றாறு - 1 அணையின் நீர்மட்டம் 16.15 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 70 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்து. அணையிலிருந்து விநாடிக்கு 100 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது.

சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 16.25 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 29 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாகவும் இருந்தது. மாவட்டத்தில் மழையின்றி வறண்ட கால நிலை நிலவுவதால் அணைகளுக்கு உள்வரத்து கணிசமாகக் குறைந்துள்ளது.

தினகரன்

**மூலிகை மந்திரம்: சீந்தில் கொடி**



ஆரோக்கியம் தந்து வாழ்நாளை நீட்டிப்பது, நீண்ட ஆயுளோடு வசீகரத்தையும் விருத்தி செய்யக்கூடியது அமிர்தம் ஆகும். அந்த அமிர்தத்தின் மகத்துவங்கள் அத்தனையையும் ஒரு மூலிகைக் கொடியிலேயே நமக்குக் கிடைக்க வேண்டும் என்றுதான் இறைவன் சீந்தில் கொடியைப் படைத்துள்ளான். அதனால்தான் சீந்தில் கொடியை அமிர்தக்கொடி, அமிர்தவல்லி என்கிறார்கள். சீந்தில், கொடி வகையைச் சார்ந்தது. சம்பங்கிக் கொடியின் இலையின் வடிவத்தைப் போன்ற இலைகளைக் கொண்டது. மிகுந்த கசப்புச் சுவை உடையது. அக்கம்பக்கம் படர்ந்து தன்னை அபிவிருத்தி செய்துகொள்ளக்கூடியது. எங்கும் விளையக்கூடியது. சிறிய மஞ்சள் நிறப்பூக்களைக் கொண்டது. சுண்டைக்காய் அளவிலான காய்களையும் கனிந்த பிறகு பவள நிறமுடைய பழங்களையும் கொண்டதாய் இருக்கும். தென்மாநிலங்கள், வங்காளம், அஸ்ஸாம் போன்ற பகுதிகளில் சாதாரணமாக சீந்தில் அதிகம் வளர்கிறது.

பெரிய மரங்களைப் பற்றிப் படரக்கூடிய இந்த சீந்தில் கொடி, வேப்ப மரத்தின் மேல் படர்ந்திருந்தால் சிறந்த மருத்துவ குணங்களைப் பெற்றிருக்கும் என மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன. சீந்திலின்

மருத்துவப் பயன்பாடுகள் Tinospora cordifolia என்பது சீந்திலின் தாவரப் பெயர். Menispermaceae எனும் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது ஆகும். இதை ஆயுர்வேத நூல்களில் அம்ரிதா, சின்னரூஹா, மதுபானி, தந்திரிகா, குண்டலினி என்கிற பெயரால் குறிப்பிடுகிறார்கள். இலை, தண்டு, வேர் அனைத்தும் மருந்தாகிப் பயன்தரக்கூடிய குணம் கொண்டது சீந்தில். செரிமானமின்மை, வலி, சோர்வு ஆகியவற்றை குணமாக்கும் தன்மையுடையது. தாது விருத்தியை உண்டாக்கக்கூடியது. விட்டுவிட்டு வந்து துன்பம் செய்யும் காய்ச்சலைத் தீர்க்கக் கூடியது. வீக்கத்தைக் கரைக்கக்கூடியது. மூட்டு வலிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடியது. ரத்தத்தின் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தக் கூடியது. கல்லீரலைப் பலப்படுத்தக் கூடியது. உடல் தேற்றியாக விளங்குவது. காம உணர்வைத் தூண்டக் கூடியது. வயிற்றுக் கோளாறுகளை வேரறுக்கக் கூடியது என எண்ணற்ற மருத்துவப் பலன்களைக் கொண்டது சீந்தில் கொடி.சீந்தில் கொடித் தீநீர் வாத சுரத்தையும், பித்த சுரத்தையும் தணிக்கும் வல்லமை கொண்டது. சீந்தில் கொடியிலிருந்து தயாரிக்கப்படும் மாவு (சீந்தில் சர்க்கரை) வயிற்றில் சேர்கிற அமிலத் தன்மையினைப் போக்கக் கூடியது. வயிற்றுப்போக்கை வற்றச் செய்வது. சீதபேதியைக் குணப்படுத்தக்கூடியது. ஆயுர்வேத மருத்துவ நூல்கள் உலர்ந்த சீந்திலை மஞ்சள் காமாலையை குணமாக்கவும், ரத்த சோகையைப் போக்கவும், அடிக்கடி சிறுநீர் கழிப்பதைத் தவிர்க்கவும், சரும நோய்களை குணமாக்கவும் பரிந்துரை செய்கிறது. ‘மேகமெனு மாதபத்தால் வெந்தவுயிர்ப்பயிரைத்தாக மடங்கத் தணித்தலால் - ஆகம் அமர ரெனலிருக்க வாதரித்த லாலே அமுதவல்லி சஞ்சீவி யாம்.’ - என்கிறது

சித்தர் பாடலான தேரன் வெண்பா. நீரிழிவு என்றும் மதுமேகம் என்றும் சொல்லப்படுகிற சர்க்கரை நோயால் ஏற்பட்ட வாட்டத்தை வெயிலால் வெந்து வாடிய பயிரை உயிர் கொடுத்துக் காத்த மழைபோல போக்கக்

கூடியது சீந்தில். நாவறட்சியையும் உடற்சூட்டையும் போக்கக் கூடியது, ஆரோக்கியமுடன் வாழவும் தீராத நோய்களை தீர்த்து வைக்கவும் உதவக்கூடிய சஞ்சீவி மூலிகை சீந்தில் என்பது மேற்கண்ட பாடலின் பொருள் ஆகும். மேலும் இன்னொரு பாடலில், ‘அமுதவல் லிக்கொடி யக்கார முண்டிடத் திமிருறு மேகநோய்த் தீபெலா மாறுமே.’-என்றும்குறிப்பிட்டிருக்கிறார் தேரையர்.

அமிர்தவல்லி எனும் சீந்தில் கொடியிலிருந்து எடுக்கப்படும் சீந்தில் சர்க்கரையை உண்டு வந்தால் கை, கால்கள் மரத்துப் போவது போன்ற சின்ன பிரச்னைகள் முதல் பால்வினை நோயினால் ஏற்பட்ட துன்பங்கள் வரை விடுதலை கிடைக்கும். இன்னொரு பாடலில் சீந்தில் கொடியின் சர்க்கரையால் பதினெட்டு வகையான சரும நோய்களை போக்க முடியும் என்கிறார்.

**சீந்தில் மருந்தாகிப் பயன்தரும் விதம்**

சீந்தில் கொடியிலிருந்து இலைகளைப் பிரித்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். உலர்ந்த இலைகளைப் பொடித்து வைத்துக்கொண்டு நீரில் கலந்து ஒரு தேக்கரண்டி அளவு காலை, மாலை இரண்டு வேளையும் குடித்து வந்தால் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். சீந்தில் தண்டுகளைக் காய வைத்து ஒரு தேக்கரண்டி பொடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பொடியை நான்கு டம்ளர் நீர் விட்டு காய்ச்ச வேண்டும். ஒரு டம்ளர் அளவாக சுண்டிய பிறகு காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் பசியின்மை, வயிற்றுவலி, செரிமானமின்மை ஆகிய துன்பங்கள் விலகும். காய்ச்சலுக்கும் இது நல்ல மருந்து. சீந்தில் கொடியை இடித்து குளிர் நீர் விட்டு ஊற வைக்க வேண்டும். மறுநாள் நன்றாகக் கடைந்து திப்பியை நீக்கிவிட்டு நீரை மட்டும் வெயிலில் வைத்திருந்தால் நீர் தெளிந்துவரும். அந்த தெளிந்த நீரை வடிகட்டிவிட்டு புதிதாக தண்ணீர் சேர்த்து கலக்கி வெயிலில் சுண்ட வைக்க வேண்டும். இப்படி பலமுறை செய்வதால் வெண்மையான மாவு போன்ற பொருள் நமக்குக் கிடைக்கும். இதுவே சீந்தில் சர்க்கரை எனப்படும். (இந்த சீந்தில் சர்க்கரை நாட்டு மருந்துக்

கடைகளிலும்கிடைக்கிறது.)

இந்த சீந்தில் சர்க்கரையை ஒரு கிராம் முதல் நான்கு கிராம் வரையில் வாயிலிட்டு நீர் அருந்துவதால் கடும் ஜுரத்துக்கு பின் ஏற்படும் உடல் இளைப்பு, மண்ணீரல் வீக்கம், இருமல், மூர்ச்சை, வாந்தி, ஆஸ்துமா ஆகியன குணமாகும். மேலும் இதனால் நாட்பட்ட சிறுநீர்ப்பை நோய்களுக்கும் தீர்வு கிடைக்கும். சீந்தில் இலையை அனலில் இட்டு வாட்டி, இளஞ்சூட்டோடு புண்களின் மேல் போட்டுவர வீக்கம் கரைந்து வலி குறையும். புண்களும் ஆறிவிடும். சீந்தில் கொடி 35 கிராம் அளவு எடுத்து நசுக்கி அதனோடு கொத்தமல்லி, அதிமதுரப்பொடி வகைக்கு 4 கிராம் அளவு சேர்த்துக் கொள்ள வேண்டும். அதனோடு 300 மி.லி. நீர் சேர்த்து சோம்பு, பன்னீர் ரோஜாப்பூ ஆகியன தலா 10 கிராம் சேர்த்து இரண்டு டம்ளர் நீர்விட்டு ஒரு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு வடிகட்டி வைத்துக்கொண்டு 25 மி.லி. முதல் 50 மி.லி. வரை தினமும் காலையில் எடுத்துக் கொண்டால் வயிற்று உப்புசம், நாள்பட்ட செரிமானமின்மை, வயிற்றைப் பாதித்துத் துன்பம் செய்கிற பல்வேறு நோய்களும் விலகும். சீந்தில் கொடியோடு நெற்பொரி வகைக்கு 50 கிராம் அளவு எடுத்து சேர்த்து ஒரு லிட்டர் நீர் விட்டுக் காய்ச்சி, 150 மி.லி. ஆகச் சுண்டச் செய்து தினமும் இருவேளை 50 மி.லி. அளவு குடித்துவர மேகச்சூடு, நாவறட்சி நீங்கும். எந்த சிரமுமின்றி வீடுகளில் வளரக் கூடிய சீந்தில் எனும் அமிர்தத்தை நாமும் பயன்படுத்திக் கொள்வோம்!

**மஞ்சள் காமாலையை குணமாக்கும் நில நெல்லி**




நில நெல்லி சாலையோரங்களில் கிடைக்க கூடியது. கீழ்காய் நெல்லியை போன்ற வடிவமைப்பை பெற்றது. பல்வேறு நன்மைகளை கொண்ட நில நெல்லி மஞ்சள் காமாலை மற்றும் தோல் நோய்களுக்கு மருந்தாகிறது. விரை வீக்கத்தை குறைக்க கூடிய தன்மை கொண்டது. காய்ச்சலை தணிக்கவல்லது. பசியை தூண்டக் கூடியது. வயிற்று புண்களை ஆற்றும். வயிற்றுப்போக்கை நிறுத்த கூடியது. சீத பேதியை தணிக்க கூடியது. நில நெல்லியின் இலை முதல் வேர் வரை மருந்தாக பயன்படுகிறது.நில நெல்லியை பயன்படுத்தி வெள்ளைப்படுதல், அடிவயிற்றில் ஏற்படும் வலியை போக்கும் மருந்து தயாரிக்கலாம். நில நெல்லி இலை மற்றும் வேர் ஒருபிடி அளவுக்கு எடுத்துக் கொள்ளவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். பின்னர், வடிகட்டி காய்ச்சிய பால் சேர்த்து குடிக்கவும். 100 மிலி வரை எடுத்துக் கொண்டால் வயிற்றுப்போக்கு, வெள்ளைப்படுதல், வயிற்றுவலி ஆகியவை குணமாகும். நில நெல்லியில், இலைகளுக்கு சற்று இடைவெளியில் காய்கள் இருக்கும். நில நெல்லி தோல்நோய் மருந்தாகிறது. உள் மருந்தாக சாப்பிடுவதால் விட்டுவிட்டு வரும் வயிற்று வலி, சிறுநீர் தாரையில் ஏற்படும் வலி, மாதவிலக்கு

சமயத்தில் ஏற்படும் வலி, வெள்ளைப்போக்கு ஆகியவை குணமாகும்.
நில நெல்லியை பயன்படுத்தி மஞ்சள் காமாலைக்கான மருந்து தயாரிக்கலாம். ஒருபிடி நில நெல்லி இலை மற்றும் காய்கள் எடுத்துக்கொள்ளவும். இதனுடன் அரை ஸ்பூன் சீரகம், அரை ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி உணவுக்கு முன்பு 100 மிலி வரை குடித்துவர மஞ்சள் காமாலை குணமாகும். பித்தத்தை சமன்படுத்தும். சிறுநீர் பெருக்கியாகவும் விளங்குகிறது. முறையற்ற உணவு, காரம், எண்ணெய் அதிகளவில் உபயோகப்படுத்துவதாலும், தண்ணீரினால் ஏற்படும் தொற்று போன்றவற்றால் மஞ்சள் காமாலை ஏற்படுகிறது. இந்நோய்க்கு நில நெல்லி சிறந்த மருந்தாகிறது. நில நெல்லி பசியை தூண்டும். நில நெல்லி இலை பசையுடன் உப்பு சேர்த்து கலந்து சிரங்கு இருக்கும் இடத்தில் தடவினால் சிரங்கு குணமாகும். நில நெல்லியானது தேமல், சொரி, சிரங்கு போன்றவற்றுக்கு மருந்தாகிறது.
நில நெல்லி இலையை பயன்படுத்தி புண்கள், பூச்சிக்கடிக்கான மேல் பூச்சு மருந்து தயாரிக்கலாம். இலை பசையுடன் நல்லெண்ணெய் சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். இந்த தைலம் புண்கள், பூச்சிக்கடியை குணப்படுத்தும். நில செல்லி செடி வகையை சார்ந்தது. கீழா நெல்லியை போன்று இருக்கும். பூச்சிகளை விரட்டும் தன்மை கொண்டது. எளிதில் கிடைக்க கூடிய இது உன்னதமான மருத்துவ குணங்களை கொண்டது.
நில நெல்லியின் இலைகளை மேல்பூச்சாக பயன்படுத்தும்போது தோல்நோய்கள் குணமாகும். வேர் பகுதியை தேனீராக்கி குடிப்பதால் பேதி சரியாகிறது. தலைக்கு தேய்த்து குளிப்பதனால் பொடுகு இல்லாமல் போகும்.

**மலச்சிக்கலை போக்கும் அவரைகாய்**




அவரை காய் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. வெண்மை நிறம், நீல நிற பூக்களை உடையது. கொடி வகையை சேர்ந்தது. கொத்துக் கொத்தாக காய்த்து உணவாக பயன்படுகிறது. சமையலில் அடிக்கடி பயன்படுத்தப்படும் காயாக அவரை விளங்குகிறது. அவரை கொடியின் இலை, பூக்களை பயன்படுத்தி தலைவலி, ஆறாத புண்களை ஆற்றும் மருந்து தயாரிக்கலாம். 5 அவரை இலைகளை துண்டுகளாக்கி எடுத்துக் கொள்ளவும். இதனுடன் சிறிது அவரை பூக்கள் சேர்க்கலாம். கால் ஸ்பூன் மஞ்சள் பொடி, ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தேன் சேர்த்து குடிக்கலாம்.இது தலைவலி, கழுத்து வலிக்கு மருந்தாகிறது. காய்ச்சலை தணிப்பதுடன் புண்களை ஆற்றுகிறது. இருமல், சளிக்கு மருந்தாகிறது. பூஞ்சை காளான்களை போக்கும். இந்த தேனீரை மேலே ஊற்றி கழுவுவதன் மூலம் தோல் நோய்கள் சரியாகிறது. சாம்பாராக வைத்து சாப்பிட்டாலும், பொரியலாக சாப்பிட்டாலும் சுவையாக இருக்கும். சுவை மட்டுமல்லாமல் சுகம் தரும் மருந்தாக அவரைக்காய் விளங்குகிறது. சுமார் 100 கிராம் அவரை காயில் மனிதனுக்கு அன்றாடம் தேவைப்படும் இரும்பு சத்து, நார் சத்து, புரதசத்து உள்ளிட்டவை அடங்கி இருக்கிறது. அவரை இலையை

பயன்படுத்தி கழிச்சல், சீத கழிச்சலுக்கான மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் அவரை இலை பசை, கால் ஸ்பூன் சீரகம், அரை ஸ்பூன் பனங்கற்கண்டு ஆகியவற்றுடன் ஒரு டம்ளர் நீர் சேர்த்து கொதிக்க வைக்கவும். பின்னர், வடிகட்டி காய்ச்சிய பால் சேர்க்கவும். இதை குடித்தால் கழிச்சல், சீத கழிச்சல் சரியாகிறது. வயிற்று புண் குணமாகிறது. அவரை காயில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. மூளைக்கு, முதுகு தண்டுக்கு, இளம் தாய்மார்களுக்கு, வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு என அனைத்து வகையிலும் பயன்படுகிறது. ரத்த சிவப்பு அணுக்களுக்கு ஊட்டம் தருகிறது. நார்ச்சத்து மிகுதியாக இருப்பதால், நச்சுக்களை நீக்கி புற்றுநோய் வராமல் தடுக்கிறது. சர்க்கரை நோயாளிகளுக்கு அற்புதமான மருந்தாகிறது. மலச்சிக்கலை போக்குகிறது. அவரை இலை வயிற்றுபோக்குக்கு மருந்தாகிறது. அவரை இலையை மேல் பூச்சாகவும் பயன்படுத்தலாம். அவரை இலை சாறுவை மெல்லிய துணியில் நனைத்து நெற்றியில் பத்தாக போடும்போது தலைவலி குறையும்.அவரை இலையை பயன்படுத்தி சேற்று புண்ணுக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். அவரை இலை பசையுடன் சிறிது மஞ்சள் பொடி, சிறிதளவு சுண்ணாம்பு, விளக்கெண்ணெய் சேர்த்து கலக்கவும். களிம்பு பதத்தில் இருக்கும் இதை சேற்று புண் இருக்கும் இடத்தில் வைத்தால் சரியாகும்.இளம் தாய்மார்கள் அவரைக்காயை உண்ணும்போது, வயிற்றில் வளரும் குழந்தைக்கு எலும்பு, மூளை, முதுகு தண்டு வளர்ச்சி முழுமையாக இருக்கும். சர்க்கரை நோயாளிகளுக்கு அற்புத மருந்தாகிறது.

**வயிற்று புண்களை ஆற்றும் பேரிக்காய்**



உடலுக்கு புத்துணர்வை தரக்கூடியதும், வயிற்று புண்களை ஆற்றும் தன்மை கொண்டதும், மலச்சிக்கலை போக்க கூடியதும், தொண்டை புண், வலியை குணப்படுத்த கூடியதும், சளி, இருமலை போக்கவல்லதுமான பேரிக்காயை பற்றி பார்ப்போம். பேரிக்காய் காயாக இருக்கும்போது, அது கெட்டியாக பச்சை நிறத்திலும், பழுத்தபின் மஞ்சள் நிறத்திலும் இருக்கும். அதிக நார்ச்சத்து, நீர்சத்து மிகுந்தது. இதை பயன்படுத்தி உடலுக்கு புத்துணர்வை தரக்கூடிய மருந்து தயாரிக்கலாம். பேரிக்காயை அரைத்து பசையாக எடுத்துகொள்ள வேண்டும். அதனுடன் சர்க்கரை சேர்த்து, நீர்விடாமல் பாகு பதத்தில் காய்ச்ச வேண்டும். பின்னர் ஆறவைத்து பாட்டிலில் எடுத்து வைக்கலாம். இதனுடன் நீர்விட்டு பருகுவதால், உடல் புத்துணர்வு ஏற்படும். பாக்டீரியாவால் ஏற்படும் தொற்றுநோயை குணப்படுத்தும். பேரிக்காய் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. கிருமி நாசினியாக விளங்கும் இது நுண் கிருமிகளை அழிக்க கூடியது. பூச்சிகளை வெளியேற்றும் தன்மை கொண்டது. வயிற்று புண்களை ஆற்றும். பேரிக்காய் சாற்றுடன் சர்க்கரை சேர்த்து சாப்பிடும்போது, அது புத்துணர்வு தரும் பானமாகவும் அமைகிறது. இதனால் உடல் வலிமை பெறும். ஆப்பிளை விட அதிக

நார்ச்சத்து உடையது பேரிக்காய். மலச்சிக்கலை போக்கும். உடலில் புண் இருந்தால் ஆற்றும். குழந்தைகளுக்கு கொடுப்பதனால் எலும்புகள் வளரும். வயிற்றுக்கோளாறு சரியாகும். பேரிக்காய் சாறுடன் சர்க்கரை சேர்த்து, அதை ஓரிரு ஸ்பூன் எடுத்து நீரில் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்தால் ஆரோக்கியம் மேம்படும். பேரிக்காயில் வைட்டமின், மினரல், நார்ச்சத்து மிகுந்துள்ளது. பேரிக்காயை கொண்டு தொண்டை வலி, சளி, இருமலுக்கான மருந்து தயாரிக்கலாம். 2 ஸ்பூன் பேரிக்காய் பசையை எடுத்து கொண்டு அதனுடன் 2 வெற்றிலையை நறுக்கி போடவும். பின்னர், நீர்விட்டு தேனீர் தயாரிக்கவும். இதை வடிகட்டி தேன் சேர்த்து குடிக்கலாம். இதன்மூலம், தொண்டை தொடர்பான நோய்கள் சரியாகும். தொண்டை புண், வீக்கம், வலி குணமாகும். சளி, இருமல் சரியாகும். குரல்வளைக்கு ஆரோக்கியத்தை தருக்கிறது. மாதவிலக்கு நின்றுபோனவர்களுக்கு எலும்பு பலத்தை தரக்கூடியது.செரிமான கோளாறுகளை சீர்செய்யும். பேரிக்காய் சாறு நோய்எதிர்ப்பு சக்தி உடையது. பூஞ்சை காளான்களை போக்கவல்லது. வலி நிவாரணியான இது வீக்கத்தை கரைக்க கூடியது. நார்ச்சத்து அதிகம் இருப்பதால் மலச்சிக்கலை போக்கும். இதில் வைட்டமின் சி அதிகம் உள்ளது. எலும்புகளுக்கு பலம் தரக்கூடியது. வயிற்று கோளாறுகளை சரிசெய்து புற்றுநோயை தடுக்கிறது. பேரிக்காய் பசையை முகத்தில் தடவும்போது முகம் புத்துணர்வு பெறும். பேரிக்காய் பசையுடன் 4 சொட்டு எழுமிச்சை சாறு, கொண்டை கடலை மாவு அல்லது கடலை மாவு, தேன் சேர்த்து முகத்துக்கு வாரம் ஒருமுறை போடும்போது கரும்புள்ளி மறையும், சுருக்கம் மறையும். பேரிக்காய் மலச்சிக்கலை போக்கி ஆசனவாயில் புற்றுவராமல் தடுக்கும். பேரிக்காய் எலும்புகளை பலப்படுத்தும் தன்மை கொண்டது.

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம் விலையில் மாற்றமில்லை**

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம் விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படவில்லை. சர்க்கரை ஆலைக்கு கரும்பு வெட்டாததால், வெல்லம் உற்பத்தி அதிகரித்துள்ளதால், விலை குறைய வாய்ப்பு அதிகம் உள்ளது. தமிழகத்தில் ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் வெல்லம் உற்பத்தி அதிகளவு நடக்கிறது. 50% வெல்லம் இங்கிருந்து உற்பத்தியாகிறது. வெளி மாநிலங்களுக்கும் இங்கிருந்து வெல்லம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெல்லம் சந்தையில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம் உற்பத்தி அதிகளவு செய்யப்படுகிறது. தமிழக அரசு கரும்பு கொள்முதல் விலை உயர்த்தாததாலும், நிலுவைத் தொகையை ஆலைகள் தராததாலும், விவசாயிகள் தாங்கள் விளைவித்த கரும்புகளை வெல்லம் தயாரிக்க அனுப்பி வருகின்றனர். இதனால் அதிகரித்த வெல்லம் உற்பத்தியால், விலை உயரவில்லை. கடந்த ஆண்டு வெளி மார்க்கெட்டில் சில்லறை விற்பனையில் அச்சு மற்றும் பெரிய வெல்லம் ஒரு கிலோ ரூ. 40 முதல் 50 வரை விற்கப்பட்டது. அதேபோல நடப்பாண்டு ஒரு கிலோ வெல்லம் ரூ.40, 45, 50 என்ற விலையில் விற்கப்படுகிறது. இன்னும் சில கடைகளில் ஒரு கிலோ வெல்லம் ரூ.35க்கும் கிடைக்கிறது. கிராமங்கள் தோறும் நடக்கும் வாரச்சந்தைகளில் ஒரு கிலோ வெல்லம் ரூ.30க்கு விற்கப்படுகிறது. இதுகுறித்து திருச்சியை சேர்ந்த மளிகை கடை வியாபாரி ஒருவர் கூறுகையில், 'கடந்த ஆண்டு விற்ற விலையில் தான் வெல்லம் விற்கப்படுகிறது. பெரிய மாற்றம் ஏற்படவில்லை. உற்பத்தி அதிகரிப்பால் விலை உயரவில்லை' என்றார். வெல்ல மண்டி வியாபாரி சேகர் கூறுகையில், 'சேலம், கரூர் மாவட்டம் பரமத்தி வேலூர் அருகே பிளிக்கல்பாளையம், நாமக்கல் காளப்பன்நாயக்கன்பட்டி, ஆத்தூர்

அருகே ஏத்தாப்பூர், எடப்பாடி ஆகிய பகுதிகளிலிருந்து திருச்சிக்கு அதிகளவு வெல்லம் வருகிறது. கரும்பு வெட்டுக்கு செல்லாததால், வெல்லம் தயாரிக்க விவசாயிகள் அதிகளவு கொடுத்துவிட்டனர். இதனால் வெல்லம் விலையில் பெரிய மாற்றமில்லை. வெல்லம் விலை குறையத் தான் இனி வாய்ப்பு அதிகம்' என்றார்.

**நிலக்கடலைக்கு ஜிப்சம் உரம் அவசியம் வேளாண் உதவி இயக்குனர் ஆலோசனை**

சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற ஜிப்சம் உரம் அவசியம் இட வேண்டும் என்று வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிரில் அதிக மகசூல்பெற ஜிப்சம் இடுவது அவசியம். ஒரு எக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் இடுவது மிகவும் அவசியம். ஜிப்சம் இடும்போது 200 கிலோவை அடி உரமாகவும், மீதமுள்ள 200 கிலோவை 40 - 45 வது நாளில் பூக்கும் தருணத்தில் இட்டு களைகொத்தி பயிரைச்சுற்றி நன்கு மண் அணைக்க வேண்டும். ஜிப்சத்தின் மொத்த அளவில் பாதியை ரசாயன உரங்களுடன் அடி உரமாக இடுவதால் பயிரில் நூற்புழுக்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் நிலக்கடலையில் உண்டாகும் சொறி போன்ற நோய்களை வெகுவாக குறைக்க முடியும். பூச்சி நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கும் ஜிப்ஸம் இட்டு களை கொத்தி மண் அணைப்பதால் கால்சியம் மற்றும் கந்தக சத்து குறைபாடுள்ள நிலங்களில் நல்ல பலன் கிடைக்கும். ஜிப்சம் இடுவதால் நன்கு விழுதுகள் இறங்கி பொக்கற்ற நல்ல எடையுடன் கூடிய திரட்சியான நிலக்கடை பருப்புகள் கிடைக்கும். அதிக மகசூலும் கிடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**இலுப்பூரில் 318 விவசாயிகளுக்கு ரூ.1.19 கோடி நல உதவி**

இலுப்பூரில் வேளாண் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் விவசாயிகள் 318 பேருக்கு ரூ.1.19 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் விஜயபாஸ்கர் வழங்கினார். புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வேளாண் விற்பனைக்கூட வளாகத்தில் வேளாண் துறை சார்பில் நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடைபெற்றது. விழாவுக்கு கலெக்டர் கணேஷ் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற அமைச்சர் விஜயபாஸ்கர், விவசாயிகள் 318 பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசியதாவது: அன்னவாசல், விராலிமலை வட்டாரங்களைச் சேர்ந்த 60 பேருக்கு ரூ.97 லட்சம் மதிப்பீட்டிலான பவர் டிரில்லர் கருவிகளும், 200 பேருக்கு ரூ.6 லட்சம் மதிப்பீட்டிலான இயந்திர நெல் நடவு தொழில்நுட்ப கருவிகளும் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இதே போல், தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்கத்தின் கீழ் முதற்கட்டமாக 58 விவசாயிகளுக்கு ரூ.15.95 லட்சம் மானிய மதிப்பீட்டிலான கறவை மாடுகளும், பயிர் சாகுபடிக்கான இடுபொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பண்ணையம் சார்ந்த பயிர் சாகுபடி முறையில் சாகுபடி மேற்கொள்ள வசதியாக தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்கம் மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தில் கறவை மாடுகள் மானியத்திலும், இவற்றுடன் நெல் மற்றும் பயறு வகை பயிர்கள் இருபோக சாகுபடி மேற்கொள்ள தேவையான வேளாண் இடுபொருட்கள் ஆகியன 50% மானியத்தில் ஒரு எக்டேருக்கு ரூ.27,500 வீதம் மானியமாக வழங்கப்படுகிறது. இதில் கறவை மாட்டுக்கு ரூ.17,500, இருபோக பயிர் சாகுபடிக்கான இடு பொருட்ளுக்கு ரூ.10 ஆயிரம் வீதம் எக்டேருக்கு ரூ.27,500 மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாறு 115 எக்டேர் பரப்பளவில் அன்னவாசல் வட்டாரத்தில் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படுகிறது. மேலும், தரமான விதைகள் உள்ளூர் சந்தை விலையை விட குறைவான விலையில் தமிழ்நாடு மாநில விதை

மேம்பாட்டு முகமையில் அம்மா சேவை மையத்தின் மூலம் 'அம்மா சீட்ஸ்" என்ற பெயரில் வழங்கப்படுகின்றன என்றார். விழாவில் ஆர்டிஓ வேல்பிரபு, வேளாண் துறை கூடுதல் இயக்குநர் (ஓய்வு) ஷாஜகான், துணை இயக்குநர் கந்தசாமி, உதவி இயக்குநர்கள் .சிங்காரம், எட்வர்ட்ரிச், முத்தையா, மனோகரன், வேளாண் அலுவலர்கள் ஜெகதீஸ்வரி, அன்பரசன், ராஜசேகரன், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர் இரா.சின்னத்தம்பி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் சுப்பையா (விராலிமலை), இளவரசி வசந்தன் (அன்னவாசல்), ஆத்மா குழுத் தலைவர்கள் பழனியாண்டி (விராலிமலை), சாம்பிசிவம் (அன்னவாசல்) இலுப்பூர் பேரூராட்சி தலைவர் குரு ராஜமன்னார். இலுப்பூர் நகர அதிமுக செயலாளர் சத்யா ராஜேந்திரன், தாசில்தார் மனோகரன், விராலிமலை ஒன்றிய கவுன்சிலர்கள் கிருஷ்ணன், பெரியசாமி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர். முன்னதாக, வேளாண் துறை இணை இயக்குநர் சந்திரசேகரன் வரவேற்றார். முடிவில் துணை இயக்குநர் சதானந்தம் நன்றி கூறினார்.

## குலை நோய் தாக்குதலை கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி பயன்படுத்த அறிவுறுத்தல்

சிவகங்கை மாவட்டத்தில் தற்போது நெற்பயிரில் ஏற்பட்டுள்ள குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது. சிவகங்கை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குருமூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: சிவகங்கை மாவட்டத்தில் தற்போது சாகுபடி செய்துள்ள நெற்பயிரில் குலைநோய் தாக்குதல் பரவலாக உள்ளது. இவை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும். பயிரின் அனைத்து பகுதிகளிலும் இலைகள், தண்டு, கணுப்பகுதி, கழுத்துப் பகுதி, கதிர் பகுதி

பூசணத்தால் தாக்கப்படலாம். இலைகளின் மேல் வெண்மை நிறத்திலிருந்து சாம்பல் நிற மைய பகுதியுடன் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப் படும். பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய ஒழுங்கற்ற திட்டுக்களை உருவாக்கும். தீவிர தாக்குதலின் போது பயிர் முழுவதும் எரிந்தது போன்ற தோற்றமளிக்கும். இதுவே குலை நோய் ஆகும். கதிர் வெளிவந்தவுடன் பயிர்கள் சாய்ந்து விடும். கதிர் பருவ நிலைக்கு முன்பே கழுத்துப் பகுதியில் நோய் தாக்கினால் தானியங்கள் உருவாகாது. மேகமூட்டமுள்ள வானம், தொடர் மழை மற்றும் தூரல்கள், அதிக அளவில் பயன்படுத்தப்படும் அம்மோனியம் சல்பேட் போன்ற தழைச்சத்து உரங்கள், காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதத்திற்கு மேல் இருக்கும்போது குலை நோய் தாக்குதல் ஏற்படும். குலைநோய் தாக்குதல் தென்பட்டால் உடனடியாக ஒரு எக்கேருக்கு டிரைசைக்ளோசோல் மருந்து 400கிராம் அடித்து கட்டுப்படுத்தலாம். நோய் கட்டுப்பாட்டில் இல்லையெனில் மீண்டும் 10நாள் இடைவெளியில் ஒருமுறை மேற்கண்ட மருந்தினை அடிக்க வேண்டும். இந்நோயில் பிபிடி 5204நெல் அதிகம் பாதிப்படைய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நிலத்தை தினமும் கண்காணிக்க வேண்டும். நோய் தாக்குதல் இருந்தால் வட்டார வேளாண் அலுவலகத்தில் உடனடியாக தகவல் தெரிவித்து ஆலோசனை பெறலாம். மேற்கண்ட மருந்து வேளாண் விரிவாக்க மையம், தனியார் உரக்கடைகளில் தேவையான இருப்பு உள்ளது. வரும் ஆண்டுகளில் குலைநோயால் தாக்குதலுக்கு உள்ளாகும் பி.பி.டி 5204நெல் ரகத்தினை பயிர் செய்வதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பூச்சி கொல்லி மருந்துகளால் அழிக்கப்படும் தேனீக்கள் செடிகள் மலட்டுத்தன்மை அடையும் அபாயம்**

பூச்சிக்கொல்லி மருந்துகளால் தேனீக்கள் வெகுவாக அழிந்து வருகின்றன. இதனால் மகரந்தச்சேர்க்கை அடையாமல் செடிகள்

மலட்டுத்தன்மை அடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.சுறு சுறுப்பிற்கு பேர்போன தேனீக்கள் பூக்களில் இருந்து சேகரிக்கும் தேன் சுவை மிகுந்தது. அத்துடன் மருத்துவ குணம் வாய்ந்த பொருளாகவும் பயன்படுகிறது. மரம் மற்றும் செடிகள் தங்களது அடுத்த சந்ததிகளை உருவாக்கிட தேனீக்கள் முக்கிய காரணியாக விளங்குகிறது. தேனீக்கள் தேன் எடுப்பதற்காக பூக்களில் அமரும்போது மகரந்த சேர்க்கை நடைபெற்று பூக்கள் காய்களாக மாறுகிறது. தேனீக்கள் தொடர்ந்து இப்பணியை செய்து வருவதால் மரம் மற்றும் செடிகள் உருவாக காரணமான காய்கள் பூக்களில் இருந்து உருவாகிறது. பூக்களில் மகரந்த சேர்க்கை நடைபெறுவதற்கு தேனீக்கள் மிக அவசியம். தேனீக்கள் அழிந்து போனால் பூக்களில் மகரந்த சேர்க்கை நின்றுபோய், பூக்கள் காய்களாக மாறிட முடியாமல், விதைகள் உருவாகாமல் செடிகள் மலட்டுத் தன்மை அடைந்து விடும். போதிய விழிப்புணர்வு இல்லாததால் விவசாயிகள் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தி தேனீக்களை அழித்து வருகின்றனர். இந்த நிலை நீடித்தால் தேனீக்களின் இனம் அழிக்கப்பட்டு, பூக்கள் காய்க்க முடியாமலும், தனது சந்ததிகளை மீண்டும் உருவாக்க முடியாத நிலையும் ஏற்படும். இதுகுறித்து தேனீக்கள் உற்பத்தியாளர்கள் கூறுகையில்," அனைத்து தேனீக்களின் தேன்களும் பயனுள்ளவை என்றாலும், சிறிய அளவிலான கொசுத்தேனீக்கள் சேகரிக்கும் தேன்வகைகள் மிகுந்த சுவையானதாகவும், மருத்துவ குணம் மிக்கதாகவும் இருக்கும். 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை தேனீக்களின் எண்ணிக்கை அதிகளவு இருந்தது. தற்போது இதன் எண்ணிக்கை பாதியாக குறைந்து விட்டது. விவசாயிகள் வீரியமிக்க பூச்சிகொல்லி மருந்துகளை பயன்படுத்துவதே இதற்கு முக்கிய காரணமாகும். தற்போது சந்தையில் 1 கிலோ தேன் ரூ.400 என்ற அளவில் கிடைக்கிறது. விவசாயிகள் தேனீக்கள் வளர்ப்பில் கூட ஈடுபடலாம். தேனீக்கள் மற்றும் மண்புழு போன்ற விவசாயத்திற்கு சாதகமான உயிரினங்கள் இறப்பை தடுக்கும் விவசாயிகள் இயற்கை

விவசாயத்திற்கு மாற வேண்டும்” என்றார். மருத்துவர் ஒருவர் கூறுகையில், “ மனிதர்களுக்கு வரும் பெரும்பாலான நோய்களுக்கு தேன் சிறந்த மருந்தாக உள்ளது. சிறியவர் முதல் பெரியவர் அனைத்து தரப்பினரும் இதனை பயன்படுத்தலாம். தேன் உற்பத்தி குறைவு என்பதால் சந்தையில் கலப்படம் நிறைந்த தேன் வகைகளே கிடைக்கின்றன. எனவே, இத்தகைய சிறப்பு வாய்ந்த தேனீக்களை பாதுகாக்கவும், வளர்க்கவும் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கூறினார்.

**உத்திரமேரூர் ஏரி நீர் நிறமாற்றத்தால் விவசாயிகள் அச்சம்**

புகழ்ப்பெற்ற உத்திரமேரூர் ஏரியில் திடீரென நிறமாற்றம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் அச்சம் அடைந்துள்ளனர். இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். வைரமேகத்தடாகம் என்று அழைக்கப்படும் உத்திரமேரூர் ஏரியானது காஞ்சிபுரம் மாவட்டத்திலேயே மிகவும் ெபரிய ஏரிகளில் ஒன்றாகும். இந்த ஏரி சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இந்த ஏரியின் நீர்வரத்துக் கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டும், பல்வேறு காரணங்களால் கடந்த 20 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது இந்த ஏரி நிரம்பி உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த ஏரியில் இருந்து 6 மதகுகள் வழியாக வெளியேறும் உபரிநீரானது 18 கிராமங்கள் உள்ளடக்கிய 6 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களில் பயிரிட ஏதுவாக இருந்து வந்தது. இதில் பெரும்பாலான விவசாயிகள் நெற்பயிர் மற்றும் கரும்பு வேர்க்கடலை ஆகியவைகளை பயிரிடுவர். பெரும்பாலான விவசாயிகளுக்கு இந்த ஏரி பயனுள்ளதாக இருந்தது. ஆனால் கடந்த சில வருடங்களாக மழை பொய்த்துப்போன காரணத்தால், உத்திரமேரூர் பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர்த்தட்டுப்பாடு வெகுவாக ஏற்பட்டு வந்தது. இந்த குடிநீர் தட்டுப்பாட்டை போக்கும் வகையில்,

உத்திரமேரூர் ஏரியில் 5 ஆழ்த்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு உத்திரமேரூக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், கடந்த 10 நாட்களுக்கு முன்பு வரை ஏரியில் இருந்து வெளியேறிய உபரிநீர், ஏரிநீர் தெளிவாக காணப்பட்டு வந்தது. இந்நிலையில் திடீரென ஏரிநீர் பச்சை நிறமாக மாறி, லேசான துர்நாற்றத்துடன் வயல்வெளிகளில் பாய்ந்து வருகிறது. இந்த பச்சை நிறத்துக்குக் காரணம் தெரியாமல் விவசாயிகள் குழம்பி வருகின்றனர். இந்த நிறமாற்றம் காரணமாக கால்நடைகளை கொண்டு செல்வோர் மற்றும் ஏரிகளில் மீன் பிடிப்பவர்கள், ஏரிகளுக்குச் செல்ல தயக்கம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ஏரி நீரில் ஏதாவது ரசாயன கழிவுகள் கலந்துள்ளதா? அல்லது, தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவுநீரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா?'' என்று புரியாமல் தவிப்பதாகவும், இந்த பச்சை நிற நீரால் தாங்கள் பெருமளவில் செலவு செய்து வைக்கும் பயிர்களுக்கு ஆபத்து ஏற்படுமோ என்று புரியாமல் அச்சத்தில் உள்ளோம். எனவே, மாவட்ட நிர்வாகம் இந்த நீரினை முறையாக பரிசோதித்து, நிற மாற்றத்திற்கான காரணம் தெரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு விவசாயிகள், விவசாயத்துறையினர் மற்றும் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ரூ.35 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அவிநாசி சேவூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்தில் ரூ.35 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் போனது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், நிலக்கடலை வரத்து அதிகரித்தது. மொத்தம் 1972 நிலக்கடலை மூட்டைகள் ஏலத்துக்கு வந்திருந்தன. ஏலத்தில் குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.4570 முதல் ரூ. 5130 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 4220 முதல் ரூ. 4480 வரையிலும், மூன்றாவது ரகம் நிலக்கடலை ரூ. 3440 முதல் ரூ. 3800 வரையிலும்,

ஏலம் போனது. மொத்தம் ரூ.35 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நேற்று நடைபெற்றது. தண்டுக்காரன் பாளையம், சூரிபாளையம், போத்தம்பாளையம், தத்தனூர், ராமியம்பாளையம், மங்கரசவலைய பாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து 396 விவசாயிகளும், மணப்பாறை, ஈரோடு, திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில் இருந்து 11 நிலக்கடலை வியாபாரிகளும், ஏலத்தில் பங்கேற்றனர். இந்த தகவலை சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளார் சரவணன் தெரிவித்துள்ளார்.

**கேரட் மகசூல் குறைந்ததால் தொழிலாளர்கள் வேலை இழப்பு**

ஊட்டி கேரட்டிற்கு நல்ல விலை கிடைத்த போதிலும், முன்னதாகவே அறுவடை செய்த நிலையில் முற்றிலும் மகசூல் குறைந்துள்ளதால் கேரட் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலை காய்கறி விவசாயம் செய்யப்படுகிறது. இதில் கேரட், உருளைக்கிழங்கு, பீன்ஸ், பீட்ரூட், முட்டைகோஸ் போன்ற பயிர் பயிரிடப்பட்டாலும், கேரட் மற்றும் உருளைக்கிழங்கு தற்ேபாது அதிகளவு பயிரிடப்படுகிறது. இதில் கேரட் தொழிலில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கேத்தி பாலாடா, முத்தோரை பாலாடா, ஆடாசோலை, அணிக்கொரை, நஞ்சநாடு, எப்பநாடு போன்ற பகுதிகளில் அதிகளவு காய்கறிகள் பயிரிடப்படும் நிலையில், இப்பகுதிகளை சேர்ந்த ெதாழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர். நாள் ஒன்றுக்கு இந்த பணியில் ஈடுபடுகிறவர்களுக்கு ரூ.500 முதல் 800 வரை கூலி கிடைக்கிறது. இந்நிலையில், கடந்த நவம்பர் மாதம் தமிழகத்தில் கொட்டி தீர்த்த மழையால் காய்கறிகள் அழுகும் நிலை ஏற்பட்டது. இதனால், அனைத்து பகுதிகளிலும் பயிரிடப்பட்டிருந்த கேரட், உருளைக்கிழங்கு போன்ற

காய்கறிகளை விவசாயிகள் அறுவடை செய்தனர். இதனால், அப்போது தொழிலாளர்களுக்கு நாள் தோறும் வேலை இருந்து வந்தது. தற்போது, பெரும்பாலான தோட்டங்களில் முற்றிலும் கேரட் அறுவடை செய்யப்பட்ட நிலையில், வரத்து மிகவும் குறைந்துள்ளதால் இதனை நம்பியுள்ள தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது.இவர்கள், மற்ற வேலைகளுக்கு சென்றாலும் கேரட் அறுவடையில் கிடைக்கும் கூலி கிடைக்காது என தெரிவிக்கின்றனர். தற்போது அனைத்து பகுதிகளிலும் கேரட் விதை நடவு பணிகள் துவக்கப்பட்ட நிலையில், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தான் இவர்களுக்கு வேலை கிடைப்பது மட்டுமின்றி, கேரட் இயந்திரங்களும் இயக்க முடியும் என விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். அதுவரை கேரட் வரத்து மிகவும் குறைந்து காணப்படும் நிலையில், விலை அதிகரிக்க வாய்புள்ளது, என்றனர்.

**தேங்காய் மட்டை கழிவுநீரால் விளைநிலம் பாதிப்பு**

தேங்காய் மட்டை கழிவுநீரால் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் சார்பில் கலெக்டரிடம் புகார் அளிக்கப்பட்டது. சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் பசுவபட்டி ஊராட்சி சென்னிமலைபாளையம் பிரிவில் தனியார் தேங்காய் மட்டை கழிவு ஆலை செயல்பட்டு வருகின்றது. இந்த ஆலையில் இருந்து வெளியேறும் கழிவுநீரால் வாய்க்கால்புதூர், கேசி நகர், ஊஞ்சக்காட்டுவலசு, பசுவபட்டி, எக்கட்டாம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு விளைநிலங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள புகார் எழுந்துள்ளது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தரப்பில் கலெக்டர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது: தேங்காய் மட்டை கழிவு நீரால் 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையை சுற்றிலும் எல்பிபி வாய்க்கால் பாசனம் 640 ஏக்கர் நிலங்கள் மற்றும் 120 கிணறுகள், 35 ஆழ்குழாய் கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே

திருப்பூர் மாவட்டம் பரஞ்சேர்வழி கிராமம் முருகம்பாளையத்தில் செயல்பட்டு வந்த தேங்காய் மட்டை கழிவு தொழிற்சாலையின் கழிவுநீரினால் நிலத்தடி நீர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது சென்னிமலைபாளையத்திலும் இத்தொழிற்சாலையினால் கடும் பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம், மாசுகட்டுப்பாடு வாரியம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

புதிய வணிக வளாகத்தில் நடந்த முதல்நாள் ஏலத்தில் **5** ஆண்டுகளில் இல்லாத அளவு குவின்டால் மஞ்சள் ரூ.**11,500**க்கு விற்பனை

ஈரோட்டில் புதிய வணிக வளாகத்தில் நேற்று நடந்த முதல்நாள் ஏலத்தில் ஒரு குவின்டால் மஞ்சள், கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவாக ரூ.11,500க்கு விற்பனை ஆனது. ஈரோடு சுண்ணாம்பு ஓடை பகுதியில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தான் கடந்த மாதம் இறுதி வரையிலும் அரசு சார்பிலான மஞ்சள் ஏலம் நடைபெற்று வந்தது. இந்நிலையில் கருமாண்டி செல்லிபாளையத்தில் அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடம் கட்ட இடம் தேர்வு செய்து ரூ.6.62 கோடி செலவில் அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடம், ஏல மையம், கிடங்குடன் கட்டி முடிக்கப்பட்டு நேற்று முதல் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டது. முதல்நாளான நேற்று அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில் விவசாயிகளும், வியாபாரிகளும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். நேற்றைய ஏலத்தில் மொத்தம் 328 மூட்டை மஞ்சள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு அனைத்து மஞ்சள் மூட்டைகளும் விற்பனையானது. இந்த ஏலத்தில் ஒரு குவின்டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.11,500க்கும், குறைந்தபட்சமாக ரூ.9367க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக ரூ.9500க்கும், குறைந்தபட்சமாக ரூ.8614க்கும் ஏலம் போனது. இதேபோல செம்பாம்பாளையத்தில் ஈரோடு மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்கத்தின் மூலம் நடந்து

வந்த மஞ்சள் ஏலமும் தற்போது ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் கட்டுப்பாட்டில் எடுக்கப்பட்டு நேற்று ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் 720 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு 97 மூட்டை மஞ்சள் மட்டும் விற்பனையானது. விரலி அதிகபட்சமாக ரூ.10915க்கும், குறைந்தபட்சமாக ரூ.7489க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக ரூ.10185க்கும், குறைந்தபட்சம் ரூ.6896க்கும் விலை போனது. நேற்று அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒரு குவின்டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.11,500க்கு விற்பனையானது கடந்த 5 ஆண்டுகளில் இதுவே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், இந்த விலை தரமான 2 லாட் மஞ்சளுக்கு மட்டுமே நிர்ணயிக்கப்பட்டதாகவும், சராசரி விலை என்று பார்த்தால் ரூ.10 ஆயிரம் என்ற அளவிலேயே இருந்ததாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**ஈரோடு ஒழுங்குமுறை கூடத்தில் மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.11,500–க்கு விற்பனை விவசாயிகள் மகிழ்ச்சி**

x



ஈரோடு ஒழுங்குமுறை கூடத்தில் மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.11 ஆயிரத்து 500–க்கு நேற்று விற்பனையானது. புத்தாண்டின் தொடக்கத்தில் அதிகவிலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>மஞ்சள் மார்க்கெட்</u>

தமிழ்நாட்டிலேயே ஈரோடு மாவட்டத்தில் தான் அதிக அளவிலான மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதனால் ஈரோடு மஞ்சள் மாநகர் என்று அழைக்கப்படுகிறது. ஈரோட்டில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31–ந் தேதி கடைசியாக நடந்த ஏலத்துக்கு விவசாயிகள் 1,734 மூட்டைகளில் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர். இதில் தனி விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.9 ஆயிரத்து 229–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.10 ஆயிரத்து 199–க்கும் விற்பனையானது. தனி கிழங்கு குறைந்தபட்ச விலையாக ரூ.9 ஆயிரத்து 99–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.9 ஆயிரத்து 810–க்கும் விற்பனையானது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

இந்தநிலையில் அரசு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 328 மூட்டைகளில் மஞ்சளை கொண்டு வந்து இருந்தனர். இதில் தனி விரலி குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.9 ஆயிரத்து 367–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.11 ஆயிரத்து 500–க்கும், தனி கிழங்கு குறைந்தபட்ச விலையாக ரூ.8 ஆயிரத்து 614–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.9 ஆயிரத்து 500–க்கும் விற்பனையானது.

இதேபோல் ஈரோடு செம்மாமம்பாளையம் வெளி மார்க்கெட்டில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 720 மூட்டைகளில் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் தனி விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.7 ஆயிரத்து 489–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.10 ஆயிரத்து 915–க்கும், தனி கிழங்கு குறைந்தபட்ச விலையாக ரூ.6 ஆயிரத்து 896–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.10 ஆயிரத்து 188–க்கும் விற்பனையானது.

கூட்டுறவு சங்கம்

கூட்டுறவு சங்கத்தில் நடந்த ஏலத்துக்கு 583 மூட்டைகள் மஞ்சள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் தனி விரலி குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.9 ஆயிரத்து 199–க்கும் அதிகபட்ச விலையாக ரூ.9 ஆயிரத்து 966–க்கும், தனி கிழங்கு குறைந்தபட்ச

விலையாக ரூ.8 ஆயிரத்து 889–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.9 ஆயிரத்து 669–க்கும் விற்பனையானது.

ஈரோடு செம்மாமம்பாளையம் வெளி மார்க்கெட், அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடம் மற்றும் கூட்டுறவு சங்கம் மூலம் நேற்று 1,631 மஞ்சள் மூட்டைகள் விற்பனையானது. புத்தாண்டின் தொடக்கத்திலேயே மஞ்சள் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.11 ஆயிரத்து 500–ஐ தாண்டி விற்பனையானதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பாரத ஸ்டேட் வங்கியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் புதிய டிராக்டர் கடன்**



அருணாசலம் கணேசன்

பாரத ஸ்டேட் வங்கியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் புதிய டிராக்டர் கடன் வழங்கப்படுகிறது என தஞ்சை மண்டல மேலாளர் அருணாசலம் கணேசன் தெரிவித்தார். 6 புதிய கிளைகள் தஞ்சை பாரத ஸ்டேட் வங்கியின் மண்டல மேலாளர் அருணாசலம் கணேசன் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தஞ்சை, திருவாரூர், நாகை மற்றும் காரைக்கால் மாவட்டங்களில்

மொத்தம் 60 கிளைகளுடன் தஞ்சையை தலைமையிடமாக கொண்டு மண்டல அலுவலகம் செயல்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு 3 புதிய கிளைகளும், 14 ஏ.டி.எம். மையங்களும் திறக்கப்பட்டன. இந்த ஆண்டு 6 புதிய கிளைகளும், 5 ஏ.டி.எம். மையங்களும் திறக்கப்பட உள்ளன. வங்கியின் நவீன தொழில்நுட்ப வசதிகளான ஆன்டிராய்டு அப்ளிகேசன், இன்டர்நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங், எஸ்.எம்.எஸ். பேங்கிங் போன்ற வசதிகளையும் வாடிக்கையாளர்கள் உபயோகித்து பயன்பெறலாம்.

வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வட்டி சலுகைகளை பாரத ஸ்டேட் வங்கி அளித்து வருகிறது. தற்போது பெண்களுக்கு வீட்டுகடன் 9.50 சதவீத வட்டியிலும், கார்கடன் 9.80 சதவீத வட்டியிலும், மற்றவர்களுக்கு வீட்டுகடன் 9.55 சதவீத வட்டியிலும், கார்கடன் 9.85 சதவீத வட்டியிலும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வட்டி சலுகை மற்ற வங்கிகளில் இருந்து ஸ்டேட் வங்கிக்கு மாற்றப்படும் வீட்டுகடன்களுக்கும் பொருந்தும்.

டிராக்டர் கடன் டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் புதிய டிராக்டர் கடன் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மிக குறைந்த வட்டியில் பிணையம் இல்லாத டிராக்டர் கடன், விளிம்பு தொகைக்கு வட்டியில்லா கடன் போன்ற சிறப்பு அம்சங்கள் இந்த புத்தாண்டையொட்டி நடைமுறைப்படுத்தப்படுகிறது. டெல்டா விவசாயிகளுக்கு துரித சேவை அளிப்பதற்காக கும்பகோணம் பஜாரில் உள்ள ஸ்டேட் வங்கியில் டெல்டா டிராக் டர் நிதி மையம் திறக்கப்பட்டு கடன் வழங்கப்பட்டு வருகிறது. புதிய டிராக்டர் வாங்கும் விவசாயிகள், டிராக்டரின் மொத்த தொகையில் 25 சதவீதம் செலுத்தினால் 11.05 சதவீத வட்டியிலும், 35 சதவீதம் செலுத்தினால் 10.80 சதவீத வட்டியிலும், 50 சதவீதம் பணம் செலுத்தினால் 10.55 சதவீத வட்டியிலும் கடன் வழங்கப்படும். இந்த புதிய கடன் திட்டம் டெல்டா விவசாயிகளிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. டெல்டா

மாவட்டங்களில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறப்பு ஒருமுறை தீர்வு திட்டம் நடைமுறையில் உள்ளது. அதன்படி வங்கியில் கடன் பெற்றவர்கள் தள்ளுபடி போக மீதம் கட்ட வேண்டிய தொகையில் இதுவரை கட்டிய தொகையை கழித்து கொண்டு மீத தொகையில் 50 சதவீதம் கட்டினால் போதுமானது. இந்த சலுகையை விவசாயிகள் பெற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**பனியால் நெல் பயிரில் குலைநோய் தாக்குதல் இழப்பீட்டுத்தொகை பெற்றுத்தரக்கோரி விவசாயிகள் கலெக்டரிடம் மனு**



சாக்கோட்டை பகுதியில் உள்ள விவசாயிகள் பனியால் நெல் பயிரில் குலைநோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே விவசாயிகளுக்கு உரிய பயிர் இழப்பீட்டுத்தொகை பெற்றுத்தர வேண்டும் என்று கூறி கலெக்டரிம் மனு அளித்தனர். குறுகியகால நெல்பயிர் காரைக்குடியை அடுத்த பெரியகோட்டையைச் சேர்ந்த அழகர்சாமி என்பவர் தலைமையில் அந்த பகுதி விவசாயிகள் குலைநோய் தாக்கிய

நெல் பயிருடன் நேற்று கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தனர். அங்கு அவர்கள் மாவட்ட கலெக்டரை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது:- சாக்கோட்டை பகுதியில் உள்ள செங்கரை, பீர்க்கலைக்காடு, நாட்டுச்சேரி, களத்தூர், பெரியகோட்டை, குருந்தம்பள்ளம், தட்டாகுடி, அம்மனப்பட்டி ஆகிய கிராமங்களில் விவசாயிகள் குறுகிய கால சாகுபடி நெல்பயிரான டீலக்ஸ் பொன்னி வகையை சாகுபடி செய்துள்ளனர். இந்த நெல்பயிர் 120 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். தற்போது சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள விவசாயிகள் இந்த நெல்பயிரினை சாகுபடி செய்து 110 நாட்கள் ஆகிவிட்டன.

பயிர் இழப்பீட்டு தொகை இந்த நிலையில் தற்போது பெய்து வரும் பனிப்பொழிவினால் கதிர்களில் குலைநோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. அறுவடை செய்ய 10 நாட்கள் மட்டுமே இருக்கும் நிலையில் இந்த நோய் தாக்கியதால் மகசூல் குறைந்து விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகும் நிலை உள்ளது. மேலும் இந்த நெல்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீடு செய்துள்ளனர். எனவே பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டுத் தொகையை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் அவர்கள்கூறியிருந்தனர். இதனைத்தொடர்ந்து கலெக்டர் மலர்விழி, வேளாண்மை இணை இயக்குனர் குருமூர்த்தியை உடனடியாக அந்த பகுதிக்கு சென்று நெல்பயிர்களை பார்வையிட்டு பாதிப்பின் அளவு குறித்து ஆய்வு செய்து விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத்தொகை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கும் படி உத்தரவிட்டார்.

அசுத்தமானகுடிநீர்

இதேபோல் சிவகங்கையை அடுத்த வி.மலம்பட்டி கிராம பொதுமக்கள் சார்பில் கலெக்டரிம் அளிக்கப்பட்ட மனுவில் கூறியிருப்பதாவது:- வி.மலம்பட்டி கிராமத்தில் மந்தை கோவிலில் இருந்து சிறுபாலைக் கண்மாய் வரை மயான சாலை அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது.

எங்கள் பகுதியில் வெள்ள மலைத்தொடர் உள்ளது. மலைக்காலங்களில் அங்கு பெய்யும் மழைநீர் அனைத்தும் இந்த சாலை வழியாக செல்லும் நிலை உள்ளது. இதனால் சாலை சேதமடையும் நிலை உள்ளது. எனவே சாலை ஓரத்தில் மழைநீர் செல்லும் வகையில் கால்வாய் அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறியிருந்தனர். இதேபோல் திருமாஞ்சோலை, அரசனூர், சமத்துவபுரம் மக்கள் சார்பில் தமயந்தி என்பவர் கலெக்டரிம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:- அரசனூர் சமத்துவபுரத்தில் 100 வீடுகள் உள்ளன. இங்கு உள்ள வாடாமல்லி தெருவில் 30 வீடுகள் உள்ளன. இந்த தெருமட்டும் மேடான பகுதியில் இருப்பதால் காலை நேரத்தில் தண்ணீர் விடும்போது தண்ணீர் சரிவர கிடைப்பது இல்லை. மேலும் கிடைக்கும் சிறிதளவு தண்ணீரிலும் அசுத்தம் கலந்து வருகிறது. எனவே உரிய நடவடிக்கை எடுத்து சுகாதாரமான முறையில் இந்த பகுதிக்கு தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் அவர்கள் கூறியிருந்தனர்.

**மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறப்பு**



ஆண்டிப்பட்டி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களின் பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது.

## 4,660 கனஅடி திறப்பு

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே அமைந்துள்ள வைகை அணை கடந்த ஆண்டு நவம்பர் மாத இறுதியில் முழு கொள்ளளவை எட்டியது. இதனையடுத்து நவம்பர் 28–ந்தேதி வைகை அணையில் இருந்து சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களின் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. மதுரை மாவட்டத்திற்கு கால்வாய் வழியாகவும், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு ஆற்றிலும் தண்ணீர் திறக்கப்பட்டது.

கடந்த மாதம் 24–ந்தேதி வைகை அணையில் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் பாசனத்திற்காக மீண்டும் தண்ணீர் திறக்க தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி நேற்று காலை

8 மணி முதல் வைகை ஆற்றில் வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இதுதவிர மதுரை மாவட்ட விவசாயத்திற்கு வினாடிக்கு 1,600 கனஅடியும், மதுரை மாநகர குடிநீர் தேவைக்காக 60 கனஅடி தண்ணீரும் என மொத்தம் 4 ஆயிரத்து 660 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

<u>நீர்மட்டம் சரிவு</u>

அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டதால் அணையின் முன்பாக உள்ள தரைப்பாலத்தை மூழ்கியபடி தண்ணீர் சென்றது. தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் வைகை அணை நீர்மட்டம் சரிந்து வருகிறது. மேலும் வைகை அணைக்கான நீர்வரத்தும் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி, அணையின் நீர்மட்டம் 62.45 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,325 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையின் மொத்த நீர் இருப்பு 4,091 மில்லியன் கனஅடியாக இருந்தது.

**போடி அருகே நறுமண பாசி சேகரிக்கும் மலைக்கிராம மக்கள் கிலோ ரூ.200–க்கு விற்பனை**



தேனி,

போடி அருகே உள்ள மலை கிராமங்களில் நறுமண பாசி சேகரித்து மலைக்கிராம மக்கள் விற்பனை செய்து வருகின்றனர். ஒரு கிலோ ரூ.200 வரை விற்கப்படுகிறது.

நறுமண பாசி சேகரிப்பு

தேனி மாவட்டம், போடி அருகே அகமலை ஊராட்சி அமைந்து உள்ளது. போடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சியாக அகமலை உள்ளது. அகமலை ஊராட்சிக்கு உட்பட்டதாக ஊரடி, ஊத்துக்காடு, கொக்கன்அலை, பட்டூர் உள்ளிட்ட பல்வேறு குக்கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் வசிக்கும் மக்கள் விவசாய வேலைகள் செய்து வருகின்றனர்.

இந்த மலை கிராம பகுதிகளில் நறுமண பாசியும் அதிக அளவில் காணப்படுகிறது. இதனை மலைக்கிராம மக்கள் சேகரித்து வருகின்றனர். பிரியாணியில் பட்டை போன்ற பொருட்களோடு இந்த பாசியும்

சேர்க்கப்படுகிறது. இந்த பாசி பிரியாணிக்கு கூடுதல் வாசத்தையும், சுவையையும் கொடுக்கிறது.

<u>கிலோ ரூ.200</u>

மரங்களிலும், பாறைகளிலும் வளர்ந்துள்ள நறுமண பாசிகளை சேகரித்து, வீடுகளிலேயே உலர்த்துகின்றனர். பின்னர் இதனை பெரியகுளம் சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர். 1 கிலோ பாசி ரூ.200 முதல் ரூ.220 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனை வியாபாரிகள் வாங்கிச் சென்று, பட்டை, கசகசாவுடன் சேர்த்து விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இதுகுறித்து கொக்கன்அலை மலைக்கிராமத்தை சேர்ந்த மக்களிடம் கேட்ட போது, ‘இந்த பாசிகளை சேகரிப்பது மிகவும் கடினமானது. மரங்களில் உயரமான இடத்தில் தான் வளர்ந்து இருக்கும். எனவே பாதுகாப்பாகவும், சிரமத்துடனும் மரங்களில் ஏறிச் சென்று பாசி எடுக்க வேண்டும். பட்டா காடுகளில் உள்ள மரங்களில் தான் பாசி எடுக்கிறோம். ஒரு நாளைக்கு 1 கிலோவில் இருந்து 1½ கிலோ வரை பாசி எடுப்போம்’ என்றனர்.

**திருப்பூரில் மாடுகள் வரத்து அதிகரித்ததால் களை கட்டிய சந்தை ஆந்திரா மாடுகளுக்கும் கிராக்கி**



திருப்பூரில் மாடுகள் வரத்து அதிகரித்து இருந்ததால் நேற்று நடைபெற்ற மாட்டுச்சந்தை களைகட்டியது. விற்பனைக்கு வந்திருந்த ஆந்திரா மாடுகளுக்கும் நல்ல கிராக்கி இருந்தது.

<u>மாடுகள் வரத்து அதிகரிப்பு</u>

திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மதியம் மாட்டுச்சந்தை நடைபெறுவது வழக்கம். இந்த சந்தைக்கு திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் மாடுகளை விற்பனைக்கு கொண்டு வருவது வழக்கம். பொள்ளாச்சி, கேரளா மற்றும் திருப்பூர் சுற்றுவட்டார கிராம வியாபாரிகள் மற்றும் விவசாயிகள இங்கு வந்து மாடுகளை வாங்கி செல்கிறார்கள்.

அந்த வகையில் நேற்று நடைபெற்ற மாட்டுச்சந்தைக்கு திருப்பூர், காங்கேயம், வெள்ளகோவில், தாராபுரம் மற்றும் பல்லடம் ஆகிய பகுதிகளிலிருந்தும், ஆந்திரா நெல்லூரில் இருந்தும் பசுமாடுகள்,

எருமைகள், கன்றுகள் என்று சுமார் 1,200 கால்நடைகள் விற்பனைக்கு வந்திருந்தன. அதே போல வியாபாரிகளும் அதிக அளவில் வந்திருந்ததால் நேற்று மாட்டுச்சந்தை களைகட்டி இருந்தது.

<u>ஆந்திரா மாடுகள் வருகை</u>

பசுமாடுகள், எருமைகள் மற்றும் வயதான மாடுகள் விரைவில் விற்று தீர்ந்து விட்டன. காங்கேயத்தில் இருந்து ஒரே ஒரு காளை மட்டும் விற்பனைக்கு வந்திருந்தது. ஏற்கனவே ஜல்லிக்கட்டுக்கு சென்று விட்டு வந்த அந்த காளைக்கு 3 வயதாகி விட்டதால் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். ஆனால் அந்த காளையின் விலை அதிகமாக இருந்ததால் யாரும் வாங்க முன்வரவில்லை. ஆகவே அந்த காளையை மீண்டும் லாரியில் ஏற்றி கொண்டு சென்று விட்டனர். கடந்த வாரம் சுமார் 800 மாடுகள் மட்டுமே விற்பனைக்கு வந்திருந்த நிலையில் இந்த வாரம் மாடுகள் வரத்து அதிகரித்து இருந்தது. விற்பனையும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

இது குறித்து விவசாயிகள் சிலரிடம் கேட்ட போது அவர்கள் கூறியதாவது:–

கடந்த மாதம் பெய்த மழையால் விவசாய நிலங்களில் கால்நடைகளுக்கு தேவையான இயற்கை தீவனங்கள் அதிக அளவில் முளைத்திருந்தது. இதனால் கடந்த 2 வாரங்களாக மாடுகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டுவராததால் வரத்து குறைந்திருந்தது. ஆனால் இயற்கை தீவனங்கள் தீர்ந்து விட்டதால் இந்த வாரம் மாடுகள் வரத்து அதிகரித்துள்ளது. அதே சமயம் ஆந்திர மாநிலத்தில் இருந்து மாடுகள் விற்பனைக்கு வந்திருக்கிறது. அந்த மாடுகளுக்கும் நல்ல கிராக்கி இருந்ததால் விரைவில் விற்று தீர்ந்து விட்டது. இதனால் அவர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**ஆத்தூர், சித்தையன்கோட்டை பகுதிகளில் முதல்போக நெல் சாகுபடி தீவிரம்**



செம்பட்டி,

ஆத்தூர், சித்தையன்கோட்டை பகுதிகளில் முதல் போக நெல் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது.

முதல்போக நெல் சாகுபடி

திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர், சித்தையன்கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் முதல் 7ஆயிரம் ஏக்கர் வரை நெல் சாகுபடி நடைபெறுகிறது. இந்த பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக நெல் விவசாயம் பாதிக்கப்பட்டு வந்தது. காரணம் ஆத்தூர் காமராஜர் அணையில் இருந்து மறுகால் பாயும் தண்ணீர் மூலம் தான் நெல் விவசாயம் நடைபெற்று வந்தது. தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயிகள் முதல்போக நெல் சாகுபடி செய்வதில் சிக்கல் ஏற்பட்டது.

தற்போது அணையில் இருந்து தண்ணீர் வரத்து இருந்ததால், ஆத்தூர் காமராஜர் அணையை ஒட்டியுள்ள பகுதி, கருங்குளம், நடுக்குளம், புல்வெட்டி குளம் மற்றும் தாமரைக்குளம் அருகே உள்ள பகுதிகளில் முதல்போக நெல் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது. இதனால் அந்த பகுதியில் உள்ள விளைநிலங்கள் பச்சை பசேலென காட்சி அளிக்கிறது.

விவசாயிகள் கோரிக்கை

இதுகுறித்து அப்பகுதி விவசாயிகளிடம் கேட்ட போது, 'செடிகள், இலைகள், தழைகளை கொண்டு விளைநிலங்களில் பிரம்படித்தல் முறை மூலம் நெல் நன்றாக விளையும் என்று பழைய முறையை கடைப்பிடித்து வருகிறோம். இந்த முறையை கடைப்பிடித்து விளைநிலங்களில் நெல் சாகுபடி செய்து வருகிறோம். இதனால் விளைச்சல் நன்றாக இருக்கிறது. மேலும் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி பயிர்களை காப்பாற்றி வருகிறோம். ஆத்தூர், சித்தையன்கோட்டை, நரசிங்கபுரம், அழகர்நாயக்கன்பட்டி, சித்தரேவு ஆகிய பகுதிகளில் வேளாண்மை துறை அதிகாரிகள் தினமும் நேரில் வந்து ஆலோசனை வழங்கினால் நெல் விளைச்சல் மேலும் அதிகரிக்கும் என்பது எங்களுடைய கோரிக்கையாக உள்ளது' என்றனர்.

**மண் மேடான விளைநிலங்களில் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவிப்பு**



சேத்தியாத்தோப்பு,

சேத்தியாத்தோப்பு அருகே மண்மேடான விளைநிலங்களில் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். மழை ஓய்ந்து ஒரு மாதம் ஆகியும் இந்த நிலை நீடிக்கிறது.

<u>மழையால் சேதம்</u>

கடலூர் மாவட்டம் முழுவதும் பருவமழை வழக்கத்தை விட அதிகளவு பெய்துள்ளது. கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த கனமழையால் மாவட்டத்தில் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, குடியிருப்பு பகுதிகளுக்கும், விளைநிலங்களுக்குள்ளும் புகுந்து பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது.

கனமழையின்போது சேத்தியாத்தோப்பு அருகே உள்ள பரவனாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. மேலும் என்.எல்.சி.யில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டதால் பரவனாற்றின் அருகில் உள்ள சூடாமணி ஏரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி மதுவானைமேடு, பின்னலூர்,

நெல்லிக்கொல்லை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 1200 ஏக்கர் விளைநிலங்களில் சாகுபடி செய்திருந்த பயிர்களை மூழ்கடித்தது. இதனால் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற்பயிர்கள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கி சேதமடைந்தது. தற்போது மழை ஓய்ந்து ஒரு மாதம் ஆகிய நிலையில், பல ஏக்கர் நிலப்பரப்பில் தேங்கி இருந்த மழைநீர் படிப்படியாக வடிந்துள்ளன.

சேறும், சகதியுமான விளைநிலங்கள்

ஆனால் பின்னலூர் கிராமத்தில் உள்ள 400 ஏக்கர் விளைநிலங்கள் சேறும், சகதியுமாக காட்சி அளிக்கிறது. சில இடங்களில் விளைநிலங்கள் மண்மேடாக மாறியுள்ளது. அதனை வடிய வைக்க முடியாமலும், அதனை செம்மைபடுத்த முடியாமலும் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், பின்னலூர் கிராமத்தில் 400 ஏக்கரில் சாகுபடி செய்திருந்த நெற்பயிர்கள் மழைவெள்ளத்தில் மூழ்கி நாசமானது. தற்போது சேறும், சகதியுமாகவும், சில விளைநிலங்கள் மண் மேடாகவும் உள்ளதால், அதனை செம்மைப்படுத்த முடியவில்லை. நாங்கள் பயிரிட்டிருந்த நெற்பயிர்களை தற்போது அறுவடை செய்திருந்தால் ஏக்கருக்கு 30 மூட்டை(ஒரு மூட்டை 50 கிலோ எடைகொண்டது) நெல் கிடைத்திருக்கும். அதற்கு வழியில்லாமல் போய்விட்டது. மழை ஓய்ந்தபிறகும், அதில் பயிர் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். மழையால் சேதமடைந்த விளைநிலங்களை சீரமைக்கவும், செம்மைப்படுத்தவும் அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்றனர்.